GEMEINDEBIBLIOTHEK
ZUCHWIL

கல்விற்கும் தகவல்களிற்கும்

# கல்விற்கும் தகவல்களிற்கும் கலந்துரையாடல்களிற்கும் சுக்வில் கிராம சபையில் உங்கள் சந்திப்பிடம்

**சுக்வில் நூலகம் இதயபூர்வமாக வரவேற்கின்றது!**

**எங்கள் நூலகம் திறக்கும் நேரம் :**

திங்கட்கிழமை 18.00 மணி தொடக்கம் 20.00 மணி வரை
செவ்வாய்க்கிழமை 15.15 மணி தொடக்கம 17.00 மணி வரை
வியாழக்கிழமை 17.00 மணி தொடக்கம 19.00 மணி வரை
வெள்ளிக்கிழமை 17.00 மணி தொடக்கம 19.00 மணி வரை

பாடசாலை விடுமுறை நாட்களில்
திங்கட்கிழமை 17.00 மணி தொடக்கம் 20.00 மணி வரை

**கதைகூறும் நேரம் :**
இலையுதிர்கால, விளையாட்டு விடுமுறை நாட்களில்

வியாழக்கிழமை 16.15 மணி தொடக்கம 17.00 மணி வரை

**ஊடகங்கள் :**
எமது நூலகத்தில் பின்வரும் ஊடகங்களை பெற்றுக் கொள்ளலாம்:

- புத்தகங்கள்
- சிறுவட்டுக்கள்
- ஒலிநாடாக்கள்
- கேட்கும்புத்தகங்கள்
- ஒளித்தட்டுக்கள்
- விளையாட்டுக்கள்

**இரவல் பெற்றுக் கொள்வதற்கான நிபந்நனைகள் :**

- 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இரவல் பெறுவது இலவசம்.
- வளர்ந்த சுக்வில் வாசிகள் வருடம் 20 பிராங் செலுத்த வேண்டும் (தம்பதிகள் 30 பிராங்).
- வளர்ந்த ஏனைய கிராமத்தவர்கள் வருடம் 25 பிராங் (தம்பதிகள் 40 பிராங்).
- பதிவு செய்வதற்குப் பெயரும் முகவரியம் உள்ள அடையாளயட்டை தேவை.
- ஒவ்வொரு தடவையும் 12 ஊடகங்கள் வரை இரவலாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- இரவலாகப் பெற்ற ஊடகங்களை தயவு செய்து அவதானமாகப் பாவிக்கவும். தொலைக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட ஊடகங்களிற்கு நட்டஈடு அறவிடவும்.
- ஊடகங்களை நீங்கள் முன்பதிவு செய்யலாம். முன்பதிவு செய்யப்பட்ட ஊடகங்கள் எங்கள் கையிற்கு கிடைத்தவுடன் உங்களிற்கு அறிவிப்போம்.

**திரும்ப ஒப்படைத்தல் :**

- நீங்கள் இரவலாகப் பெற்றுக்கொண்ட ஊடகங்களை 6 வாரங்களிற்கு வைத்திருக்க முடியும் (ஒளித்தட்டுக்கள் 3 வாரங்கள்).
- நீங்கள் இரவல் பெற்ற பொருட்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஒப்படைக்கப்படவேண்டும்.அல்லது காலவரையறையை நீடிக்க வேண்டும். அது தவறின் நூலகம் தண்டனைக் கட்டணத்தை அறவிடும். (1 வது தண்டனைக்கட்டணம்: 3 பிராங், 2 வது தண்டனைக்கட்டணம்: 8 பிராங்).

எங்கள் சலுகை உங்களிற்கு சிறப்பாக அமையும் என்று நாங்கள் நம்புகின்றோம்!
எங்களிற்கு உங்கள் வருகை மகிழ்ச்சியளிக்கும்!

Gemeindebibliothek Zuchwil
Hauptstrasse 45 (Kijuzu)
4528 Zuchwil
032 685 83 48